## இலங்கை தேசிய புத்தக அபிவிருத்தி சபை 2010

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இலங்கை தேசிய புத்தக அபிவிருத்திச் சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான உரிய பதிவேடுகளை முறையாகப் பேணியிருந்தன எனவும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்படப்பட்ட விடயங்களால் நிதிக்கூற்றுக்களில் விளையும் தாக்கங்களைத் தவிர இலங்கை தேசிய புத்தக அபிவிருத்திச் சபையின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகளையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைய, நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 சிறந்த கணக்கீட்டு நடைமுறைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இறுதி புத்தக இருப்பானது கொள்விலை அல்லது நிகர தேறக்கூடிய பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதியின் அடிப்படையில் கணக்குவைக்கப்பட வேண்டிய போதிலும் கொள்விலையில் 20% மற்றும் 50% கழிவின் கீழ் விற்பனை செய்யப்படுகின்ற சிறுவர் செயற்திட்டத்தின் புத்தக இருப்புக்களும் கிரயத்தில் 90% கழிவிற்கு விற்பனை செய்யப்படுகின்ற தொகுப்பு I மற்றும் II புத்தக இருப்புக்களும் ரூபா 7,776,495 கிரயத்தில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 1.2.2 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள பின்வரும் கணக்கு விடயங்கள் உரிய துணைப் பதிவேடுகள்/ அறிக்கைகளுடன் கணக்கிணக்கம் செய்யப்படாததன் காரணமாக அவ்விடயங்களின் சரியானதன்மையினை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

| | கணக்கு விடயம் | கணக்குகளின் பிரகாரம் மீதி | துணைப் பதிவேடு/ அறிக்கை | துணைப்பதிவேடு/ அறிக்கையில் குறிப்பிடப்பட்ட மீதி | வேறுபாடு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | ரூபா | ரூபா |
| (அ) | தொகுத்தல் செயற்திட்டம் II | 64,015 | இருப்பு பதிவேடு | 74,635 | 10,620 |
| (ஆ) | வனங்களினை அழகுபடுத்தல் செயற்திட்டம் | 133,590 | மேற்படி | 132,860 | 730 |
| (இ) | சிங்கள எழுத்துக்கள் | 20,493 | மேற்படி | 20,355 | 138 |
| (ஈ) | தொகுத்தல் செயற்திட்டம் I | 70,380 | மேற்படி | 70,265 | 115 |

### 1.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெளித்தரப்பினர்களுக்கு 1987 ஆம் ஆண்டிற்கும் 1997 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் வழங்கப்பட்ட ரூபா 166,005 தொகையான முற்பண மீதிகளை இன்றுவரை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1986 ஆம் ஆண்டிற்கு முன்னரிலிருந்து எவ்வித மாற்றமும் இல்லாமல் முன்கொண்டுவரப்பட்டுக் காணப்பட்ட ஐந்தொகையில் பொறுப்புக்களின் கீழுள்ள ரூபா 2,876,614 தொகையான இனங்காணப்படாத 2 மீதிகளை இனங்கண்டு தீர்த்த வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை வங்கியிலுள்ள ரூபா 200,000 தொகையான நிலையான வைப்புக்கள் தொடர்பாக பெறவேண்டிய வட்டிக்கணக்குகளில் முன்னைய ஆண்டிலிருந்து முன்கொண்டுவரப்பட்டுக் காணப்பட்ட ரூபா 18,711 தொகையான மீதியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பின்வரும் விடயங்களை அவற்றிற்கு எதிராகக் காட்டப்பட்டுள்ள சான்றுகள் இல்லாமையின் காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி/ மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது.

| | விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | நிலையான வைப்பு – ரூபா 250,000 | 250,000 | வைப்புச் சான்றிதழ் |
| (ஆ) | 4 நிலையான வைப்புக்கள் | 7,479,866 | மீதிகளை உறுதிப்படுத்தல் |
| (இ) | நாட்குறிப்புக்கள் இலக்கம் 3,4,6 மற்றும் 7 | 135,882 | சான்றாவணங்கள் |

### 1.2.5 சட்டங்கள், விதிகள், முகாமைத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) இலங்கை தேசிய புத்தக அபிவிருத்தி சபை நியதிச் சட்டம் | |
| (i) 7 ஆம் பந்தி | பணிப்பாளரின் அதிகாரம் ஒப்படைக்கப்படாது சபையின் பொது நிர்வாகம், வங்கி கணக்குகளின் கட்டுப்பாடு, நிதியக் கட்டுப்பாடு என்பன சபையின் செயலாளரினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (ii) 14 ஆம் பந்தி | சபையின் செயற்பாடுகள் தொடர்பாக ஒவ்வொரு ஆண்டின் மார்ச் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் அமைச்சருக்கு முன்னைய ஆண்டிற்கான சபையின் நடவடிக்கை தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 9 ஆம் பிரிவு | சபையின் அமைப்பு வரைபடம் தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் அதிகாரப் பகிர்வும் கடமை ஒப்படைப்பும் இடம்பெற்றிருக்காமையினால் ஒவ்வொரு உத்தியோகத்தரினதும் கடமை நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2004 யூலை 29 ஆந் திகதிய பீஈடீ 25 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபம் | சபையின் ரூபா 6,608,579 தொகையான மிகைப்பணம் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்காக அமைச்சிற்குப் பொறுப்பான அமைச்சரினதும் நிதி அமைச்சரினதும் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் 880 மற்றும் 881 | அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் பிணை வைக்கவேண்டிய உத்தியோகத்தர்களில் மூன்று நபர்களிடமிருந்து பிணை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2. சபையினை ஸ்தாபித்தல்

-----------------------------------

1972 மே 17 ஆந் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது இலங்கை தேசிய புத்தக அபிவிருத்திச் சபையினைத் தோற்றுவிப்பதற்கும் அதனை பாராளுமன்ற அதிகாரச் சட்டத்தின் மூலம் சட்டமாக்குவதற்கும் செயற்பாடற்றுக் காணப்பட்ட தேசிய புத்தகங்கள் கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களையும் பதவியணியினரையும் உத்தேச தேசிய புத்தக அபிவிருத்திச் சபைக்கு ஒப்படைப்பதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. இத்தீர்மானத்தின் பிரகாரம் தேசிய புத்தக அபிவிருத்திச் சபை ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் நியதிச் சட்ட நிறுவனம் ஒன்றாக அது சட்டமாக்கபட்டடிருக்கவில்லை. 1974 யூன் 12 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது இச்சபை கல்வி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு செயலாளரின் பொறுப்பின் கீழ் காணப்படுகின்ற நியதிச் சட்டமற்ற சபை ஒன்றாகப் பேணுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அமைச்சரவைச் செயலாளரின் 2007 ஏப்ரல் 26 ஆம் திகதி சீஎம்/07/0542/316/022 ஆம் இலக்க ய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் சபையினை நியதிச்சட்ட நிலைக்கு மாற்றுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தும் அதில் குறிப்பிடப்பட்ட நடைமுறைகளை அமுல்ப்படுத்துவதற்கு மீளாய்வாண்டின் போது சபைக்கு முடியாதிருந்தது.

## 3. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 நிதிசார் மீளாய்வு

### நிதிசார் விளைவுகள்

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவு ரூபா 2,646,830 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த 2009 ஆண்டிற்கான மிகை ரூபா 1,981,278 ஆக இருந்தது. இதன் பிரகாரம் 2009 ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதிசார் விளைவுகளில் ரூபா 665,552 தொகையான முன்னேற்றம் ஒன்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

(ஆ) புத்தகங்களைக் கொள்வனவு செய்தல் அச்சிடுதல் சந்தைப்படுத்துதல் என்பன சபையின் பிரதான செயற்பாட்டு நடவடிக்கைகளாக இருந்த போதிலும் சந்தைப்படுத்தப்பட்ட புத்தகங்களின் கிரயம் விற்பனை வருமானங்களுடன் கணக்கிணக்கம் செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படாது புத்தகக் கொள்வனவுகள் மற்றும் விற்பனைகள் பேரேட்டுக் கணக்குகளுக்கிடையே முறையற்ற விதத்தில் செம்மையாக்கப்பட்டு வருடாந்த நிதிசார் விளைவுகள் கணிப்பிடப்பட்டிருந்தது.

(இ) களஞ்சியத்தின் மிகுதி புத்தக இருப்புக்கள் முறையற்ற விதத்தில் களஞ்சியப்படுத்தல் மற்றும் இயற்கை அனர்த்தங்களுக்கு உட்படுவதன் காரணமாக அதன் தேறக்கூடிய பெறுமதி மிகக் குறைவாக இருந்தும் அதற்குரிய செம்மையாக்கல்கள் செய்யப்படாததன் காரணமாக வருமானச் செலவுக் கணக்குகள் பிழையான மிகையைக் காட்டியுள்ளது.

## 3.2 செய்றபாட்டு மீளாய்வு

### 3.2.1 செயலாற்றல்

(அ) 2007 ஆம் ஆண்டில் இலங்கை தேசிய புத்தக அபிவிருத்திச் சபை நிதியச்சட்டத்தின் 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு 15 அங்கத்தவர்களை உள்ளடக்கிய அங்கத்துவ சபை காணப்பட வேண்டிய போதிலும் 2010 மே 12 ஆந் திகதி வரை காணப்பட்ட அங்கத்துவ சபை இராஜினாமாச் செய்ததன் பின்னர் இது வரை புதிய அங்கத்துவ சபை நியமிக்கப்படாது 2011 பெப்ரவரி 28 ஆந் திகதி தலைவர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

(ஆ) மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் மதிப்பிடப்பட்ட மொத்த பெறுமதியில் 50% ஆகிய ரூபா 4,665,000 தொகை 13 நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த ஏற்பாடுகளிலிருந்து எந்த நடவடிக்கையும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### 3.2.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிக்கப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) எழுத்தாளர் உதவிச் செயற்திட்டத்திலிருந்து மீளாய்வாண்டின் போது ரூபா 1,194,550 பெறுமதியான 6,792 புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அவை கொள்வனவு செய்யப்படும் போது சபையினால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த பருமனளவுடன் இணங்கியவையா என்பது மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டம் தொடர்பாக எழுத்தாளர்களுக்கு தெரியப்படுத்தும் வேலைத்திட்டம் ஒன்றும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) எழுத்தாளர் உதவிச் செயற்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட அனைத்து புத்தகங்களையும் பின்தங்கிய பாடசாலைகளின் நூல்நிலையங்களை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தில் நன்கொடையளித்தல் சபையின் கொள்கையாக இருந்த போதிலும் அதற்கு மாற்றமான பாடசாலைகள் அறநெறிப் பாடசாலைகள், பொது நூல் நிலையங்கள் என்பவற்றின் வேண்டுகோளின் பேரில் நன்கொடை செய்யப்பட்டிந்தன.

**(இ) புத்தக இருப்பு**

-------------------------

(i) புத்தகங்களை சந்தைப்படுத்தல் மற்றும் நன்கொடையளித்தல் தொடர்பாக முறையான வேலைத்திட்டம் ஒன்று இல்லாமல் புத்தங்களைக் கொள்வனவு செய்ததன் காரணமாக வருடாந்தம் இருப்பு மட்டம் அதிகரித்துக் காணப்பட்டது.

| ஆண்டு | இறுதி இருப்பு |
|---|---|
| 2010 | 12,344,516 |
| 2009 | 11,498,162 |
| 2008 | 11,268,802 |
| 2007 | 9,738,106 |
| 2006 | 7,880,758 |

(ii) முறையற்ற களஞ்சியப்படுத்தலின் காரணமாக அதிகளவான புத்தங்கள் இயற்கை அழிவுகளுக்கும் கறையான் அரிப்புக்கும் உட்பட்டு அழிவுற்றிருந்தன.

(iii) நி.பி 756 இன் பிரகாரம் புத்தகங்கள் தொடர்பாக பொருள் மெய்மையாய்வு தொடக்கத்திலிருந்து இதுவரை இடம்பெற்றிருக்கவில்லை.

(iv) நி.பி 752 மற்றும் 753 இன் பிரகாரம் பொருள் பெறுவனவுப் பத்திரங்களும் பொருள் வழங்கல் பத்திரங்களும் பயனபடுத்துதல், நி.பி 751 மற்றும் 754 இன் பிரகாரம் பெறுவனவுகளும் வழங்கல்களும் முறையாக இருப்பேடுகளில் பதிவு செய்தல் இருப்பேடுகளைச் சமப்படுத்துதல் என்பன இடம் பெற்றிருக்கவில்லை.

### 3.2.3 நிதிகளின் குறைந்த பயன்பாடு

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காசு மீதி ரூபா 2,050,276 ஆக இருந்த போதிலும் சபையின் சராசரி மாதாந்த நிதித் தேவைப்பாடு ரூபா 500,000 என்பது வங்கி கணக்குகளின் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டதுடன் இந்த மிகைப் பணத்தினை வினைத்திறனாக முதலீடு செய்து வருமானத்தை உழைப்பது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.2.4 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகளின் நல்ல ஆளுகை தொடர்பான சுற்றுநிருபத்தின் 5:1 ஆம் பந்தியின் பிரகாரம் சபையினால் கூட்டிணைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2.5 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2003 யூன் 30 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 7.4.1 மற்றும் 7.4.2 ஆம் பிரிவுகள், 2005 யூலை 01 ஆந் திகதிய பீஈடீ/31 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2.6 உள்ளகக் கணக்காய்வு

உரிய வரிசை அமைச்சின் உதவியுடன் உள்ளகக் கணக்காய்வு பேணப்பட்டிருக்கவில்லை.

### 3.2.7 பாதீடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பீஈடீ/12 ஆம் இலக்க 2003 யூன் 02 ஆந் திகதிய பொது முயற்சிகளின் நல்ல ஆளுகை தொடர்பான நிதி அமைச்சு சுற்றுநிருபத்தின் 5.2 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான சபையின் பாதீடானது தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவுகளுக்கிடையே 20% இலிருந்து 100% வரையான முரண்கள் காணப்பட்டமையும் பாதீடு செய்யப்பட்ட வருமானம் 24% இனால் உள்ளபடியான வருமானத்தினை அடைந்து கொள்ள முடியாமையும் பாதீடு சிறந்த முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்படவில்லை என்பதனைச் சுட்டிக்காட்டுகின்றது.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் சபையின் தலைவருக்கு அவ்வப்போது தெரிவிக்கப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடும் அதிகாரப் பகிர்வும்
(இ) இருப்புக் கட்டுப்பாடு
(ஈ) செயலாற்றல்
(உ) திட்டமிடலும் பாதீட்டுக் கட்டுப்பாடும்
(ஊ) புத்தகங்கள் கொள்வனவும் சந்தைப்படுத்தலும்